# INFORM

இதழ் 17 / மே 2015

சிங்கப்பூரில் உள்ள வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கான மனிதவள அமைச்சின் (MOM) சிறப்பு வெளியீடு












## பரஸ்பர மரியாதை மற்றும் அக்கறையைக் கொண்டாடுதல்

30 நவம்பர் 2014 அன்று 5 ஆவது வெளிநாட்டுப் பணிப்பெண்கள் தினத்தை (FDW Day) வெளிநாட்டுப் பணிப்பெண்கள் (FDW) கொண்டாடினர்.

சமூக ஆதரவு மற்றும் பயிற்சிக்கான வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கான கூட்டமைப்பால் (FAST) ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நிகழ்ச்சியில் சுமார் 5,000 வெளிநாட்டுப் பணிப்பெண்கள் கலந்துக்கொண்டு, சிங்கப்பூரில் உள்ள குடும்பங்களுக்குச் செய்த பங்களிப்புகளுக்காக அனைத்து வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கும் பாராட்டு தெரிவித்தனர்.

வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கென சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளில் அவர்கள் மகிழ்ச்சியுடன் ஈடுபட்டனர். மேலும், இந்தோனேஷிய பிரபலங்களான ட்ரையோ மக்கான் (Trio Macan) கலை நிகழ்ச்சிகளையும் கண்டு களித்தனர். “ஆண்டின் சிறந்த வெளிநாட்டுப் பணிப்பெண்” மற்றும் ”ஆண்டின் சிறந்த முதலாளி” விருதை வென்றவர்கள் குறித்த அறிவிப்பும் இந்த நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாகும். இந்த விருதுகள் ஒருவர் மீது ஒருவர் மரியாதையும் அக்கறையும் காட்டுகின்ற வெளிநாட்டுப் பணிப்பெண்களையும் முதலாளிகளையும் கௌரவிக்கின்றன.

சிறப்பு விருந்தினரான, சுகாதாரம் மற்றும் மனிதவளத்திற்கான மூத்த அமைச்சர், டாக்டர் ஏமி கோர் (Dr Amy Khor) அவர்கள் முதலாளிகள் மற்றும் தொழிலாளர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொள்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். அத்தகைய பாராட்டுதல்கள் வலிமையான பணி உறவுகளை வளர்க்க உதவும் என்று தெரிவித்தார்.

► வீட்டில் எவ்வாறு சிறந்த பணி சார்ந்த உறவுமுறைகளை வளர்த்துக் கொள்வது என்பது குறித்து **”ஆண்டின் சிறந்த வெளிநாட்டுப் பணிப்பெண்”** மற்றும் **”ஆண்டின் சிறந்த முதலாளி”** விருதை வென்றவர்கள் பகிர்ந்துகொண்ட உதவிக் குறிப்புகளைப் படியுங்கள்.

# முதலாளி-வெளிநாட்டுப் பணிப்பெண் உறவுகளுக்கான வெற்றி பெறும் கூட்டிணைவு




ஆண்டின் சிறந்த வெளிநாட்டுப் பணிப்பெண் விருதை வென்றவர், செல்வி சொன பந்தேஜஸ் (Chona Bandejas)

பிலிப்பைன்ஸ் நாட்டின் வெளிநாட்டுப் பணிப்பெண் செல்வி சொன பந்தேஜஸ் 'ஆண்டின் சிறந்த வெளிநாட்டுப் பணிப்பெண்' விருதை வென்றார். திரு ச்சே (Mr Che) குடும்பத்திற்கு 22 ஆண்டுகளாக அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றிய மற்றும் 106 வயது வரை உயிர் வாழ்ந்த திரு ச்சே-இன் தந்தைக்கும் பராமரிப்பு வழங்கிய 47 வயதான இப்பெண்மணிக்கு இந்த விருது கிடைத்தது அவருக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளித்தது! முதலில் தனது பொறுப்புகளை மேற்கொள்வதற்கு தனக்குச் சிறிது கால அவகாசம் தேவைப்பட்டது எனவும், தனது தாய்நாட்டிலிருந்து வெகுதொலைவு வந்து பணிபுரியும் வேளையில், தனது முதலாளி தன்னிடம் காட்டிய ஆதரவும் புரிதலும் புதிய பணிச் சூழலுடன் தன்னைச் சுலபமாக ஒருங்கிணையச் செய்தது எனவும் இவர் நினைவு கூர்ந்தார். செல்வி சொன தன்னுடைய சக வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கு வழங்கியுள்ள அறிவுரை:

**பொறுமையைக் கடைப்பிடியுங்கள், கடுமையாக வேலை செய்யுங்கள் மற்றும் உங்கள் முதலாளிகளுடன் பரஸ்பர நம்பிக்கையை வளர்த்துக்கொள்ளும் வகையில் பணிபுரியுங்கள்.**



ஆண்டின் சிறந்த முதலாளி விருதை வென்றவர், மேடம் தே அஹ் நியோ (Mdm Tey Ah Neo)

'ஆண்டின் சிறந்த முதலாளி' விருது மேடம் தே அவர்களுக்கும் அவரது கணவர் திரு தே அஹ் நெவோ அவர்களுக்கும் வழங்கப்பட்டது. இவர்கள் தங்களுடைய வெளிநாட்டுப் பணிப்பெண்ணான செல்வி ரோடலின ஸகுய்ட் டலௌய்டவோ (Ms Rodalina Saguid Dalauidao)-க்கு முன்மாதிரியான பராமரிப்பும் ஆதரவும் வழங்கினர். இத்தம்பதியினர் செல்வி ரொடாலினாவின் மூன்று பிள்ளைகளுக்கு, அவர்களின் பல்கலைக்கழக கல்விக்காகப் பொருளாதார உதவியை வழங்கினர். இந்த உதவி செல்வி ரொடாலினாவின் பிள்ளைகளின் வாழ்வை மேம்படுத்தி, அவர்களின் தாயைச் சிறப்பாக பராமரிப்பதற்கான சிறந்த நிலையை அவர்கள் அடைவார்கள் என்று உறுதியாக நம்புகின்றனர். இத்தம்பதியினர் சக முதலாளிகளையும் அவர்களின் வெளிநாட்டுப் பணிப்பெண்களையும் ஒருவருக்கு ஒருவர் எப்பொழுதும் ஆதரித்துக் கொள்வதற்கு ஊக்குவித்தனர்.

## கிரேஸ் மேனேஜ்மென்ட் & கன்சல்டன்சி சர்வீஸ் (GMC) நிறுவனத்தால் பின்வரும் பயிற்சி வகுப்புகள் வழங்கப்படுகின்றன



### குழந்தைப் பராமரிப்பு

**பயிற்சி திட்டம் அமர்வு 1**

- புதிதாகப் பிறந்த குழந்தையைப் பராமரித்தல்
- தொப்புள் கொடி பராமரிப்பு
- குளிப்பாட்டுவதற்கான அடிப்படைகள்
- அரைக்கச்சைத் துணிகளை மாற்றுவதில் செய்யக் கூடியவை மற்றும் செய்யக் கூடாதவை
- ஆடை அணிவித்தல் மற்றும் ஆடைகளை அகற்றுதல்

**பயிற்சி திட்டம் அமர்வு 2**

- தூக்குவதற்கான நுட்பங்கள்
- உறங்க வைப்பதற்கான நிலைப்பாடுகள்
- அழுகை மற்றும் அதை எவ்வாறு கையாளுவது
- உணவு ஊட்டுதல் மற்றும் ஏப்பத்தைத் தணித்தல்
- தனிப்பட்ட சுகாதாரம்
- பொதுவான பாதுகாப்பு

**கட்டணங்கள்**

அமர்வுகள் 1 & 2 வகுப்பறையை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி வகுப்பு: ஒவ்வொரு வெளிநாட்டுப் பணிப்பெண்ணுக்கும் S$54 (தொடங்குவதற்கு குறைந்தபட்சம் 5 நபர்கள் அவசியம்)
வீட்டை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி வகுப்பு: S$180

**கால அளவு**

வகுப்பறையை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி வகுப்பு: 6 மணிநேரங்கள்
வீட்டை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி வகுப்பு: 4 மணிநேரங்கள்

**இடம்**

நடைபெறும் இடம் (வகுப்பறையை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி வகுப்பு)
10 ரேபர்ன் பார்க் புளோக் C #02-33 சிங்கப்பூர் 088702
தொலைபேசி: 6299 4333 மின்னஞ்சல்: gracemgt@gmcs.com.sg

மற்ற வெளிநாட்டுப் பணிப்பெண்கள் எவ்வாறு தங்களுடைய ஓய்வு தினங்களைச் சிங்கப்பூரில் செலவழிக்கிறார்கள் என்பதை நீங்கள் எப்பொழுதாவது நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா? இன்ஃபார்ம் (INFORM) குழு அதைக் கண்டறிகிறது:



## இளைப்பாறுங்கள்!
## – வெளிநாட்டுப் பணிப்பெண்களின் வழியில்



"வழக்கமாக நான் பள்ளிக்குச் செல்கிறேன் (ஆர்ச்டியோசியன் கமிஷன் ஃபார் தி பாஸ்ட்டோரல் கேர் ஆஃப் மைக்ரண்ட்ஸ் & ஐட்டினெரண்ட் பீப்பிள், ACMI)."

**– செல்வி அல்மா(பிலிப்பைன்ஸ்) மூன்று ஆண்டுகளாக சிங்கப்பூரில் பணிபுரிந்து வருகிறார்**



"ஏதேனும் புதிதாகக் கற்றுக் கொள்வதற்காக நான் தனிப்பயிற்சி மற்றும் வகுப்புகளில் கலந்துகொள்கிறேன். சிங்கப்பூரில் இருக்கும் வேளையில், எங்களால் இயன்ற அளவு கற்றுக்கொள்ள இயலுவதற்கான வாய்ப்பை நாங்கள் பெரிதும் விரும்புகிறோம்."

**– செல்வி விகி இர்னவடி ரஹாயு (இந்தோனேஷியா) சிங்கப்பூரில் எட்டு ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறார்**



"துணி தைத்தல், சிகையலங்காரம் மற்றும் பேக்கிங் ஆகியவற்றைக் கற்றுக் கொள்வதற்காக நான் பள்ளிக்குச் (ஃபிலோடெப்) செல்கிறேன். நானும் என் நண்பர்களும் அடிக்கடி தாவரவியல் பூங்காக்களுக்கும், தேவாலயத்திற்கும் ஒன்றாகச் செல்கிறோம். மேலும், நாங்கள் சிட்டி ஹாலில் கிடைக்கும் பர்மிய உணவை மிகவும் விரும்புகிறோம்!"

**– செல்வி தின் தின் (மியான்மர்)**

# உங்களுடைய பணி அனுமதி ஒழுங்குமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் குறித்து அறிந்துகொள்ளவும்



## ✓ உங்கள் நண்பர்களை அழைப்பதற்கு முன்னர் உங்கள் முதலாளியிடம் அனுமதி பெறுங்கள்

ஞாயிற்றுக்கிழமை உங்களுடைய ஓய்வு தினமாகும். உங்கள் முதலாளியின் குடும்பம் வீட்டில் இல்லாத காரணத்தால், நீங்கள் நண்பர்களுடன் வெளியில் செல்வதற்குப் பதிலாக, அவர்களை உங்கள் முதலாளியின் வீட்டிற்கு வருமாறு அழைக்க முடிவு செய்கிறீர்கள். எனினும், இது சரியானது அல்ல. உங்களுடைய முதலாளியின் வீட்டிற்கு உங்கள் நண்பர்களை நீங்கள் அழைக்கிறீர்கள் எனில், முதலில் உங்கள் முதலாளியிடம் அனுமதி பெற வேண்டும்.

உங்களுடைய முதலாளியின் அனுமதியின்றி யாரேனும் வீட்டிற்குள் நுழைந்தால், அது அத்துமீறி நுழைவதாகக் கருதப்படும். அத்துமீறி நுழைவது சிங்கப்பூரில் ஒரு குற்றமாகும்.

நினைவில் கொள்ளுங்கள்

**உங்கள் முதலாளியின் அனுமதியின்றி உங்கள் நண்பர்கள் அவருடைய வீட்டிற்குள் நுழையக் கூடாது.**



## ✗ சிங்கப்பூரில் பணிபுரியும் வேளையில் நீங்கள் கர்ப்பம் அடைவது உங்களைப் பிரச்சனையில் சிக்க வைக்கலாம்

நவம்பர் 2013–இல், இந்தோனேஷிய வெளிநாட்டுப் பணிப்பெண்ணான செல்வி முஸ்லியடி தன்னுடைய முதலாளியின் வீட்டில் இரகசியமாகக் குழந்தை பெற்றுக் கொண்டார். தனது முதலாளியிடமிருந்து தனது புதிதாகப் பிறந்த குழந்தையை மறைப்பதற்காக, செல்வி முஸ்லியடி தன் குழந்தையை ஒரு போர்வையில் சுற்றி, அதை ஒரு பிளாஸ்டிக் பையில் வைத்து, கொல்லைப்புறத்தில் புதைத்து விட்டார். அதற்குப் பின்னர் காவல்துறை நாயின் உதவியுடன் புதைக்கப்பட்ட குழந்தையைக் காவலர்கள் கண்டறிந்தனர். அவரது நடத்தைகளுக்காக, செல்வி முஸ்லியடி மூன்று மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.

# மனம் திறந்து பேசுங்கள்

நீங்கள் எங்களுடனோ அல்லது உங்களுடைய சக வெளிநாட்டுப் பணிப்பெண்களுடனோ எதையேனும் பகிர்ந்துகொள்ள விரும்புகிறீர்களா? அது குறித்து எங்களுக்கு எழுதி அனுப்புவதற்கு உங்களை வரவேற்கிறோம். அல்லது இன்ஃபார்மின் எதிர்கால இதழ்களில் என்னவெல்லாம் இடம்பெற வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதை எங்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கவும். உங்களுடைய கடிதங்களைப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்: **Media, Promotions & Education Branch, Foreign Manpower Management Division, Ministry of Manpower Services Centre, 1500 Bendemeer Road #02-01, Singapore 339946.**

### செல்வி மய சதர் வின் (மியான்மர்)

வெளிநாட்டுப் பணிப்பெண்களின் சார்பாக, எங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நான் இன்ஃபார்முக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நான் பின்வருவனவற்றை மற்ற வெளிநாட்டுப் பணிப்பெண்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்:

"வாழ்வில் நாம் பிரச்சனைகளையும் சிக்கல்களையும் சந்திக்கிறோம்;
அவை நமது வாழ்வின் ஒரு பகுதியாகும்;
அவற்றின் காரணமாக நாம் மேலும் அதிகமாகப் பக்குவப்படுகிறோம்;
நமது வாழ்வு மேம்படுகிறது;
எனவே பயப்பட வேண்டாம், அவற்றை தைரியமாகச் சந்தியுங்கள்."

**இன்ஃபார்ம் குழு** – செல்வி மய, உங்களுடைய கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டதற்கு நன்றி. இது உண்மையில் ஊக்கமளிப்பதாக உள்ளது!

### செல்வி சிடி ஹஜரியாஹ் (இந்தோனேஷியா)

இந்த அழகிய சிங்கப்பூரில் என்னால் பணிபுரிய முடிவதற்கு நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். பயனுள்ள தகவல்களை எங்களுக்கு அளிப்பதற்காக இன்ஃபார்முக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய நண்பர்கள் அனைவருக்கும் ஒரு அறிவுரையைப் பகிர்ந்துகொள்வதற்கும் கூட நான் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்:

நீங்கள் இங்கு இருக்கும் வேளையில், உங்களுக்கு கிடைக்கும் வாய்ப்பைத் தவறவிட்டு விடாதீர்கள். வாழ்கைக்காக சம்பாதிப்பதோடு, உங்கள் அறிவையும் திறன்களையும் மேம்படுத்திக் கொள்வதற்கு நீங்கள் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள வேண்டியதும் அவசியமாகும். நாம் என்றென்றும் ஒரு வெளிநாட்டில் வாழ மாட்டோம். நினைவில் கொள்ளுங்கள்: "ஒரு கொக்கு எவ்வளவு உயரமாக பறந்தாலும், அது நிச்சயமாகத் தன் கூட்டிற்குத் திரும்பி வர வேண்டியது அவசியமாகும்".

**இன்ஃபார்ம் குழு** – வணக்கம் சிட்டி, நீங்கள் மிகவும் அர்த்தமுள்ள ஒரு அறிவுரையைப் பகிர்ந்துகொண்டீர்கள். நீங்கள் தொடர்ந்து இன்ஃபார்ம் இதழைப் படிப்பீர்கள் என்றும், இதில் இடம்பெற்றுள்ள பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்வீர்கள் என்றும் நம்புகிறோம்.

### செல்வி கருணாநிதி புவனேஸ்வரி (இந்தியா)

நான் சிங்கப்பூரில் பணிபுரிவது இதுவே முதல்முறை. நான் முதன்முதலில் விமான நிலையத்தில் வந்திறங்கிய போது, எனக்கு குழப்பமாகவும் பயமாகவும் இருந்தது. ஆனால் சேவை முகப்பில் இருந்த அதிகாரி என்னிடம் "தயவுசெய்து சிரியுங்கள்" என்று கூறி எனக்கு சிறிது இனிப்புகளை வழங்கினார். அது நான் மிகவும் வரவேற்கப்படுகிறேன் என்ற உணர்வை எனக்கு அளித்தது, மேலும் சிங்கப்பூரில் எனது புதிய வாழ்க்கையைத் தொடங்க என்னை ஆவலுடன் எதிர்பார்க்கவும் வைத்தது. நான் சிங்கப்பூரில் இருக்கும் வேளையில், பல புதிய திறன்களைக் கற்றுக்கொள்ளவும் விரும்புகிறேன்.

**இன்ஃபார்ம் குழு** – வணக்கம் புவனேஸ்வரி, நீங்கள் சிங்கப்பூரில் பணி புரிவதற்கு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். அனைத்தும் சிறப்பாக அமைய உங்களை வாழ்த்துகிறோம்.

### செல்வி ஜேன் ஒ மோர்டிடோ (பிலிப்பைன்ஸ்)

நான் இன்ஃபார்மின் கடந்த இதழைப் படித்த பிறகு மிகவும் ஊக்கம் பெற்றேன். சக வெளிநாட்டுப் பணிப்பெண்களின் கதைகள் எனக்கு மிகவும் தொடர்புடையவையாக உள்ளன. ஒரு வெளிநாட்டுப் பணிப்பெண்ணாக இருப்பது என்பது அவ்வளவு சுலபமல்ல என்பதை நான் அறிவேன். நாங்கள் எங்களுடைய குடும்பத்தினரைப் பிரிந்து வாடுகிறோம் என்றாலும், அவர்களுக்கு ஒரு சிறந்த வாழ்க்கையை அமைத்துத் தருவதற்காக நாங்கள் வெளிநாட்டில் பணிபுரிவது அவசியம் என்பதை உணர்கிறோம். நாங்கள் இப்போது செய்ய வேண்டியதெல்லாம், மன பலத்துடனும் நம்பிக்கை இழக்காமலும் இருப்பதேயாகும். எங்களுடைய வாழ்வில் நாங்கள் வெற்றி பெறுவதற்கு இது மிகவும் முக்கியமாகும்.

**இன்ஃபார்ம் குழு** – வணக்கம் ஜேன், இன்ஃபார்மில் வெளிவந்த எங்களுடைய கட்டுரைகள் உங்களுக்கு மிகவும் ஊக்கமளித்தன என்பதை அறிவதில் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி. இந்த இதழும் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் என்று நம்புகிறோம்.

# எமி லேச்டறி – சக வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கு உண்மையில் மிகவும் ஊக்கமளிப்பவராக உள்ளார்



► **இந்தோனேசியாவில் உள்ள ஜோ:ஃக்ஜகார்தாவில் இருந்து வந்துள்ள செல்வி எமி லேஸ்டறி, ஒரு வெளிநாட்டுப் பணிப்பெண்ணாக 12 வருடங்களாகச் சிங்கப்பூரில் பணிபுரிந்து வருகிறார்.**

பல வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஒரு வெளிநாட்டுப் பணிப்பெண்கள் தின நிகழ்ச்சியில், ஐதா (Aidha)-இல் இருந்து வந்த ஒரு மாணவர் அளித்த உரையினால் எமிக்கு பண மேலாண்மை மீது மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது.

(2006-இல் இருந்து, ஐதா (Aidha) தங்களுடைய மாணவர்களுக்கு, அவர்களின் குடும்பத்தினருக்கு மற்றும் அவர்களின் சமுதாயத்தினருக்கு நீடித்து நிலைக்கக்கூடிய விருப்பத்தேர்வுகளை அளிப்பதன் மூலம், அவர்களில் பெரும்பாலானோர் சுயமாகத் தொழில்களைத் துவங்குவதற்கும், தங்களுடைய தாய்நாடுகளில் ஆதாயம் தரும் முதலீடுகளைச் செய்வதற்கும் இயலச் செய்கின்ற பண மேலாண்மை, கணினி கல்வியறிவு, தலைமைப் பண்பு மற்றும் தொழில்முனைவுத் திறன்களில் பயிற்சித் திட்டங்களை வழங்கி வருகிறது.

அதன் பிறகு எமி ஐதா-வில் (Aidha) இணைந்து, இரண்டு வருடப் பயிற்சி வகுப்பு ஒன்றில் (பாடம் 1 - நிதி மற்றும் தொழில்நுட்பம் மற்றும் பாடம் 2 - தொழில்முனைவு மற்றும் தொழில் மேலாண்மை) பதிவுசெய்து கொண்டார். ஐதாவில் (Aidha) படிக்கும் போது, ஒரு நவநாகரீக ஆடையகம், ஆடை தயாரிப்புக்கான ஒரு ஆடை தயாரிப்பு பயிற்சி மையம் மற்றும் ஒரு திருமண மண்டபம் ஆகியவற்றை ஒன்றிணைத்து, அனைத்துச் சேவைகளும் ஒரே இடத்தில் கிடைக்கப்பெறும் வகையிலான ஒரு சேவை மையத்தை அமைப்பதற்கான ஒரு 1-இல்-3 (3-in-1) தொழில் செயல்திட்டத்தை எமி சமர்ப்பித்தார். 110 ஐதா (Aidha) பட்டதாரிகளுக்கு மத்தியில் எமியை இரண்டாவது இடத்தை வெல்ல இத்திட்டம் உதவியது.

எமி 2014-இல் பட்டம் பெற்றார், மேலும் இவர் தனது தாய்நாட்டில் இத்திட்டத்தைத் துவங்குவதற்கு நம்பிக்கையும் உள்ளார். எமி அதிக நிதி சார்ந்த அறிவைப் பெற்றுள்ளார், மேலும் தனக்குள்ள திறன்களையும் அறிந்து வைத்துள்ளார். "என்னால் முடிவுகளைக் காண முடிகிறது. என்னுடைய செலவினங்களை நான் மிகவும் ஒழுங்கமைத்துள்ளேன், மேலும் எவ்வாறு என் ஊதியத்தைக் கையாளுவது என்பதையும் நான் கற்றுக் கொண்டுள்ளேன்." என்று எமி கூறினார். அவர் அத்தொழிலை ஒவ்வொரு கட்டமாகத் தொடங்கத் திட்டமிடுகிறார், மேலும் அதை நிறுவியவுடன், ஆடை தயாரிப்பு பயிற்சி வகுப்புகளில் மற்றவர்களுக்குத் தன்னார்வத்துடன் கற்றுத் தர தனது நேரத்தைச் செலவிடவும் விரும்புகிறார்.

எதிர்காலத்திற்காக சேமித்து வைப்பதற்கும், முதலீடு செய்வதற்கும் தனது மகனையும் பெற்றோர்களையும் எமி ஊக்குவிக்கிறார். தங்களுடைய குறிக்கோள்களை மனதில் நிலைநிறுத்துவதன் மூலம், தங்களுக்குரிய வெற்றிக் கதைகளை உருவாக்குமாறு தனது சக வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கு அவர் அறிவுரை கூறுகிறார். எமி உண்மையிலேயே ஊக்கமளிப்பவராகத் திகழ்கிறார். மேலும், இவரது கடின உழைப்பும் தீர்மானமும் பாராட்டத்தக்கது.

# யு வார் சித் – ஒரு வெளிநாட்டுப் பெண்ணின் கதை



► **செல்வி யு வார் சித் (மியான்மர்) கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாகத் தனது தற்போதைய முதலாளியிடம் பணிபுரிந்து வருகிறார்.**

மற்ற வெளிநாட்டுப் பணிப்பெண்களைப் போலவே, இவர் சிங்கப்பூரில் பணிபுரிவதற்கும் வாழ்வதற்கும் தன்னைச் சரிசெய்துகொள்ள இவருக்கு கால அவகாசம் தேவைப்பட்டது. இவர் தனது முதலாளியுடன் ஒரு சிறந்த பணி உறவைப் பெற்று மகிழ்வதற்காக, இவரது தொடக்கக்கால அச்சங்களில் இருந்து மீள்வதற்கு இவரால் எவ்வாறு நிர்வகிக்க இயலும் என்பதைக் கண்டறிவதற்கு இன்:ஃபார்ம் குழு இவரிடம் பேசியது.

## முதல் முறையாக சிங்கப்பூரில் பணிபுரிவது எதைப் போன்று இருந்தது?

நான் 2011-இல் முதல் முறையாக சிங்கப்பூருக்கு வந்த போது, நான் என்னைச் சரிசெய்துகொள்ள மிகவும் சிரமப்பட்டேன். நான் சோகம் தாங்காமல் அடிக்கடி அழுதேன். ஒரு வெளிநாட்டில் இருப்பது அதுவே முதல்முறை. அக்குடும்பம் என்னை ஏற்றுக்கொள்ளுமா என்பது எனக்கு அப்போது தெரியவில்லை. எனினும், ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்குச் சிறிது கால அவகாசம் தேவைப்படுகிறது என்பதை நான் இப்போது அறிவேன்.

## உங்களின் தற்போதைய முதலாளிக்காகப் பணிபுரிவது குறித்து எவ்வாறு உணர்கிறீர்கள்?

சிங்கப்பூரில் நான் பணிபுரியும் என்னுடைய தற்போதைய முதலாளியின் குடும்பம், என் இரண்டாவது குடும்பமாகும். பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு முதியவரை நான் பராமரிக்கிறேன். நான் அவர்களை என் குடும்பத்தினரைப் போலவே நடத்துகிறேன், மேலும் நான் அவர்களை "அம்மா" (அம்மா அல்லது மேடம்) என்றும் "அய்யா" (அப்பா அல்லது அய்யா) என்றும் தான் அழைக்கிறேன். அவர்கள் என்னைத் தங்களுடைய மகளாகவே நடத்துகின்றனர், மேலும் நாங்கள் நகைச்சுவையாகவும் பேசி மகிழ்கிறோம். அவர்கள் எனக்கு அடிப்படை ஆங்கிலமும் மலாய் மொழியையும் கற்றுத் தந்தனர், மேலும் இந்திய மற்றும் மலாய் பாணி உணவுகளையும் சமைக்கக் கற்றுத் தந்தனர். இப்போது நான் இக்குடும்பத்திற்காக சமைக்கும் போது, அது மிகவும் சுவையாக இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்!

## நீங்கள் வழக்கமாக உங்களுடைய ஓய்வு தினங்களை எவ்வாறு கழிக்கிறீர்கள்?

வேலையில் இருந்து சிறிது ஓய்வு எடுத்துக் கொள்வதற்கு ஓய்வு தினங்கள் எனக்கு மிகவும் முக்கியமாகும். நான் வழக்கமாக தோ பாயோவில் உள்ள மியான்மர் புத்தர் கோயிலுக்கு அல்லது காலாங்கில் உள்ள புத்தர் கோயிலுக்கு வழிபடச் செல்கிறேன். ஓய்வாகப் பொழுதைக் கழிப்பதற்காக, நான் பெனின்சுலா பிளாஸாவில் பொருட்களை வாங்கச் செல்கிறேன், மேலும் கார்டன்ஸ் பை த பே, செந்தோச, சிங்கப்பூர் தாவரவியல் பூங்காக்கள் மற்றும் ஈஸ்ட் கோஸ்ட் பார்க் ஆகிய இடங்களுக்குச் செல்கிறேன். நான் சிங்கப்பூரில் நண்பர்களைப் பெற்றுள்ளேன், நாங்கள் ஒன்று சேர்ந்து ஊர் சுற்றுவதற்கு விரும்புகிறோம்.

## சிங்கப்பூரில் பணிபுரியும் மற்ற வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கு என்ன அறிவுரை கூற விரும்புகிறீர்கள்?

வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கு மொழித் தடை மிகவும் பொதுவான ஒரு பிரச்சனையாக உள்ளது, எனவே அடிப்படை ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள். நீங்கள் இங்கு முதல் முறையாகப் பணிபுரிகிறீர்கள் எனில், நீங்கள் சிறிது சோகமாகவும் அசௌகரியமாகவும் உணர்வது இயல்பானது என்றாலும், அது சிறிது காலத்தில் படிப்படியாக மறைந்துவிடும். உங்கள் வேலையை எப்படிச் செய்வது என்று உங்களுக்குப் புரியவில்லை என்றால், அவர்களிடம் பணிவுடன் கேட்கவும். அவர்கள் வேலையை எவ்வாறு செய்வது என்பதைச் செய்து காண்பிக்கும் போது, அதை முறையாகக் கற்றுக்கொள்ளுங்கள்.

தாய்நாட்டில் உள்ள உங்கள் குடும்பத்தை அடிக்கடி நினைத்துப் பார்க்கவும், ஏனென்றால் அவர்களுக்காக தான் நாம் இங்கு பணிபுரிய வந்துள்ளோம். மேலும், நீங்கள் உங்கள் குடும்பத்திற்காகத் தாய்நாட்டிற்குப் பணம் அனுப்பி வைக்கும் வேளையில், உங்களுடைய ஓய்வு நாட்களின் போது உங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்வதற்குச் சிறிது பணத்தை வைத்துக் கொள்வதற்கு மறக்காதீர்கள்.

# பயனுள்ள தொடர்பு விவரங்கள்

உதவி அல்லது அவசரகாலங்களுக்காக பின்வரும் எண்களைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள்

## MOM வெளிநாட்டுப் பணிப்பெண் (FDW) உதவியழைப்பு எண்

MINISTRY OF MANPOWER 1800 339 5505

இந்த நேரடித் தொலைபேசி எண்ணானது, நலவாழ்வு, ஊதியம் மற்றும் பிற வேலைவாய்ப்பு தொடர்பான விவகாரங்கள் தொடர்பாக உதவி மற்றும் ஆலோசனையை நாடுகின்ற வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கானதாகும்.

## பிற அவசர காலங்கள்

ஆம்புலன்ஸ்/தீ 995

காவல்துறை 999

## பிற உதவியழைப்பு எண்கள்

(ACMI) நேரடித் தொலைபேசி எண்
6280 5424

சிங்கப்பூர் அபய ஆலோசனைச் சங்கம் (SOS)
1800 221 4444
(24 hours)

குடிபெயர்தல் பொருளியலுக்கான மனிதநேய அமைப்பு (HOME) நேரடித் தொலைபேசி எண்
6341 5525 /
1800 797 7977

வேலைவாய்ப்பு முகமைகளின் கூட்டமைப்பு (சிங்கப்பூர்)
6836 2618

சமூக ஆதரவு மற்றும் பயிற்சிக்கான வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கான கூட்டமைப்பு (FAST)
1800 339 4357 (24 hours)

## அரசுத் தூதரகங்கள் மற்றும் உயர் ஆணையங்கள்

| | |
|---|---|
| வங்கதேசம் | 6255 0075 |
| இந்தியா | 6737 6777 |
| இந்தோனேஷியா | 6737 7422 / 9295 3964 |
| மியான்மர் | 6735 1672 |
| பிலிப்பைன்ஸ் | 6737 3977 |
| இலங்கை | 6254 4595 |
| தாய்லாந்து | 6737 2475 / 8421 0105 |